Bodhi International Journal of Research in Humanities, Arts and Science
Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

# சரோஜா பாண்டியன் படைப்புகளில் உளவியல்

**முனைவர் ஜெ. அமுதா**
*துறைத்தலைவர், தமிழியல்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி*

Open Access

Manuscript ID:
BIJ-SPL3-JAN26-MD-065

Subject: Tamil

Received : 29.07.2025
Accepted : 12.01.2026
Published : 31.01.2026

DOI: 10.64938/bijsi.v10si3.26.Jan065

Copy Right:

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License.

**முன்னுரை**
*உளவியல் மனிதனின் உள்ளம், உடல் வளர்ச்சி, நடத்தை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. உளவியல் என்பது உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் அதன் விழைவுகளையும் விளைவுகளையும் ஆராய்கிற ஓர் அறிவியலாகும்[1] என்கிறார் தி.சு.நாடராஜன். மனிதனின் நடத்தை, மனித உறவுமுறைகளைப் பற்றிப் படிப்பதாகும் என வெஸ்டர் குரோ மற்றும் ஆலிஸ் குரோ விளக்கம் தருகின்றனர். "ஆங்கிலத்தில் 'சைக்காலஜி' (Psychology) என்னும் சொல் உளவியல் என்ற தமிழ்ச் சொல்லிற்கு நேரானது. சைக்கி (Psycho) லோகஸ் (Logus) ஆகிய இரண்டு சொற்களின் கூட்டாகவே 'சைக்காலஜி' வழங்குகிறது. 'சைக்கி' ஆன்மாவைக் குறிக்கும் கிரேக்கச் சொல். ஆன்மாவை ஆராயும் அறிவியல் (Science of the Soul) என்பது சைக்காலஜிக்கான பொருள். இந்தச் சொல்லை முதன்முதலில் ரூடோல்ப் ப்ஜியோக்கல் பயன்படுத்தினார் என்பர்."[2] ஆசிரியர் சரோஜா பாண்டியன் படைப்புகளில் காணலாகும் குழந்தை உளவியல் மனச்சிக்கலுக்கு குடும்ப மாந்தர்கள் எங்ஙனம் காரணமாகின்றனர் என்பதைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொல்: உளவியல், குழந்தை, பெற்றோர்கள்**

**குழந்தை உளவியல்**

ஆசிரியர் சரோஜா பாண்டியன் படைப்புகளில்,

1. உறவை இழந்த நிலை
2. மாற்றத்தை ஏற்க இயலாத நிலை
3. புறக்கணிக்கப்படும் நிலை
4. பெற்றோர்களின் தகாத ஒழுக்கத்தால் இழிவுக்குட்படும் நிலை

ஆகியவற்றால் குழந்தைகள் மனச்சிக்கலுக்கு உள்ளாகின்றனர் என்கிறார்.

**உறவை இழந்த நிலை**

ஒரு குழந்தையின் அன்றாடத் தேவைகளைப் பாசத்துடனும் விருப்பத்துடனும் செய்து வருபவர்களையே குழந்தை விரும்பும். அக்குண நலன்களுடைய ஒருவரை இழக்கும்போது அன்புக்காக ஏங்கும் குழந்தையை ஆசிரியர் "செத்த பிறகு சிலை எடுப்பார்" என்ற சிறுகதையில் சித்தரித்துள்ளார்.

இச்சிறுகதையில் இடம் பெறும் ரவி 4 வயதுச் சிறுவன். ரவியின் அம்மா பணிக்குச் செல்வதால் அவனது பாட்டியே பெரும்பாலும் கவனித்து விடுவாள். அவனது பாட்டி இறந்த பின்பு ரவி பள்ளிக்குச் சென்று வீட்டுக்கு வந்தவுடன் வீட்டு வேலைக்காரி மாலை டிபனைக் கொடுக்கும் போது, ரஸ்க்கைத் தொட்டான். அது இன்னும் சூடாயிருந்தது. அவனால் எடுத்துச் சாப்பிட முடியவில்லை. அவன் பாட்டியை நினைத்தான். பாட்டி அவனைத் தூக்கி மடியிலே வைத்துக் கொண்டு சூவைக் கழற்றிப் போட்டு விட்டு, காலைத் தடவிக் கொடுத்து, சூடா தோசை வார்த்து மணக்கும் சாம்பாரிலே தொட்டு ஊட்டி விடுவாள். ஆனால் இந்த ஒரு வாரமாய் இந்தக் காய்ந்த ரொட்டியும் பிஸ்கெட்டும் தான். அம்மா டிபனைக் கொடுக்கிறாள். அவனுக்குப் பிடிக்கவில்லை. "பாட்டிக்குப் பதிலா இந்தம்மாவே என்னப் பார்த்துப்பாங்கன்னு சொன்னாங்களே. இந்தம்மா சிடுசிடுங்கிறாங்க. அவனுக்குப் பிடிக்கவில்லை".

(செத்த பிறகு சிலை எடுப்பார்,; ப., 92)

என்று ஆசிரியர் ரவியின் மனநிலையை விளம்புகிறார். இதன் வாயிலாக குழந்தைகள் பள்ளி முடிந்த வீட்டுக்கு வந்ததும் அன்பாகவும் ஆர்வமாகவும் பேணுதல் இல்லாத நிலையில்

Vol. 10 Special Issue 3 January 2026
E-ISSN: 2456-5571

அக்குழந்தையின் மனம் ஏக்கமடைகிறது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**மாற்றத்தை ஏற்க இயலாத நிலை**

குழந்தைகள் இயல்பாகவே தன்னுடைய பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோர் மீது அன்பு கொண்டிருப்பர். ஆனால் அதே சமயத்தில் உடைமையைப் பிறர் பங்கிட்டுக் கொள்ளும் போது அம்மாற்றத்தை ஏற்க இயலாத நிலையில் குழந்தைக்குப் பொறாமை ஏற்படுவதை ஆசிரியர் 'ஊரான் பிள்ளை' என்ற நாவலில் எடுத்தியம்பியுள்ளார்.

இந்நாவலில் இடம்பெறும் மங்களத்திற்கு வசந்தன் பிறந்த ஒன்றேகால் வருடத்திலேயே நிரஞ்சன் பிறந்து விடுகின்றான். அதனால் குழந்தை நிரஞ்சன் பிறக்க மூன்று மாதங்கள் இருக்கும் பொழுது தான் அவள் முதல் குழந்தை வசந்தனை தாய்ப்பால் குடிப்பதை மறக்கடிப்பதற்காக முயற்சி மேற்கொண்டாள். பின்னர் நிரஞ்சன் ஒருநாள் தன் தாய் மடியில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போது வசந்தனின் செயலை ஆசிரியர் கூறுகிறார்.

> **"தான் குடித்த தாய் மடியில் தம்பி நிரஞ்சன் பால் குடிப்பதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மங்களத்தின் மடியிலிருந்து குழந்தையைத் தள்ள முயற்சிப்பான். ஆனாலும் ஒருநாள் தூங்கிக் கொண்டிருந்த தன் தம்பியின் வாயில் தன் பலம் கொண்ட மட்டும் கிள்ளி விட்டான்."**
>
> ***(ஊரான் பிள்ளை, ப.16)***

என்பதன் மூலம் குழந்தைகள் தனக்குரியதைத் தன் உடன்பிறந்த மற்றொரு குழந்தை பங்கிட்டுக் கொள்ளும் போது அம்மாற்றத்தை ஏற்க முடியாத மனநிலை உடையவராக இருப்பதைச் சித்தரித்துள்ளார்.

**புறக்கணிக்கப்படும் நிலை**

பெற்றோர் தங்கள் குழந்தைகள் மத்தியில் பால் வேறுபாடு கருதி ஒருவரைப் புறக்கணிக்கும் பேர்து போட்டி மனப்பான்மை தோன்றும் என்பதை ஆசிரியர் சரோஜா பாண்டியன் 'ஓர் பிஞ்சு வெம்பி வாடி உதிர்கிறது' என்ற சிறுகதையில் எடுத்துரைத்துள்ளார்.

இச்சிறுகதையில் இடம்பெறும் முரளி, ரேவதி ஆகியோருடைய குழந்தைகள் ஆர்த்தி, கண்ணன். இவர்களிருவரும் கறுப்பு நிறமுடையவர்கள். ஆனால் பெற்றோர் வெளியிடங்களுக்கு கண்ணனை மட்டுமே அழைத்துச் செல்வார்கள். மிகுந்த அன்பும் காட்டுவார்கள். ஏனென்றால் ஆர்த்தி கரிய நிறமுடைய பெண் குழந்தை. இதனால் ஆர்த்தியின் மனம் வேதனைக்குள்ளாகிறது. அதனால் ஆர்த்திக்கு தன் தம்பியின் மீது வெறுப்பும் போட்டி மனப்பான்மையும் வளர்ந்ததை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

> **"அந்தப் பிஞ்சு மனதிலே ஓர் ஏக்கம் தணியாத காயம், அணையாத வெம்மை, அது தம்பி மீது வெறுப்பாய் வடிவெடுத்தது. பொம்மையிலிருந்து சைக்கிள் வரைக்கும் சாக்லேட், பிஸ்கட்டிலிருந்து சாப்பாடு வரைக்கும் ஆர்த்தியின் மனதில் கண்ணனோடு போட்டி மனப்பான்மையே வளர்ந்தது."**
>
> ***(ஓர் பிஞ்சு வெம்பி வாடி உதிர்கிறது, ப., 21)***

என்பதன் மூலம் பெற்றோர்கள் கருநிறமுடைய ஆண்குழந்தையை ஏற்றுக் கொண்டாலும் அதே கருநிறமுடைய பெண்குழந்தையைப் புறக்கணிக்கும் போது அக்குழந்தையின் மனநிலை பாதிக்கப்படுவதைச் சித்தரித்துள்ளார்.

பெற்றோரின் தகாத ஒழுக்கமும் குழந்தைகள் இழிவுபடுத்தப்படலும் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் அன்பினை மட்டும் செலுத்தினால் போதாது. அவர்கள் தாம் நல்லொழுக்கத்தை பின்பற்றாத நிலையில் அவர்களது குழந்தைகள் மனச்சிக்கலுக்கு உள்ளாவதை 'ஒரு தீப்பெட்டி ஒரு விளக்கை அணைத்தது' என்ற சிறுகதையில் கூறியுள்ளார்.

இச்சிறுகதையில் இடம்பெறும் பத்தாம் வகுப்புப் பயிலும் கண்ணாத்தாளின் தாய் பூவாத்தா. இவள் தன் கணவனின் சகோதரனுடன் (சங்கிலி) தகாத உறவு கொள்கிறாள். இச்செயலை கண்ணாத்தாளின் வீட்டினருகில் வசிப்போர் இழிவாகப் பேசுகின்றனர்.

ஒருநாள் கண்ணாத்தா பள்ளிக்கூடத்திறக்குச் செல்லும் குழந்தைகளுடன் தானும் இணைந்து வருவதாகக் கூறுகிறாள். அப்பொழுது அக்குழந்தைகள்,

> **"உங்கூடப் போனா எங்கம்மா வைறாங்க. உங்கம்மா கெட்டவுங்களாமே நீ ஒன்னு முன்னால போ, இல்ல பின்னால வா, வீணா எங்களுக்கு அடி வாங்கிக் கொடுக்காத."**
>
> **(ஒரு தீப்பெட்டி ஒரு விளக்கை அணைத்தது, ப.48)**

என்று கூறுகின்றனர். இதன் மூலம் பெற்றோர்கள் ஒழுக்க நெறியிலிருந்து பிறழும் போது அக்குழந்தைகள் உடன் பயிலும் குழந்தைகளால் புறக்கணிக்கப்படுவதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

தன் தாயுடன் பேசும் சங்கிலிப் பெரியப்பாவிடம் இன்முகத்தோடு பேசுவாள். ஆனால் பெரியப்பாவையும் தன் தாயையும் இணைத்துப் பலரும் பேசுவதற்கான காரணத்தை கண்ணாத்தா வளர வளரப் புரிந்து கொள்கிறாள். அதனால்

> **"இப்பொழுதெல்லாம் அவள் சங்கிலிப் பெரியப்பா வந்தால் பேசுவதில்லை. பள்ளிக்கூடம் போகும் போது அவரிடம் காசு கேட்பதில்லை."**
>
> *(மேலது, ப. 68)*

என்ற கதைப்பகுதி வழி குழந்தைகளின் உடல், அறிவு வளர்ச்சிக்கேற்ப நல்லொழுக்கம் உடையவர்களை அடையாளம் காணும் திறனும் வளர்வதும் தீய ஒழுக்கமுடையவருடன் உறவாடாமல் தவிர்ப்பதும் புனைந்துரைக்கப்படுகிறது.

**முடிவுரை**

குழந்தைகள் பேணுதல் இல்லாத நிலையிலும் குழந்தை பங்கீட்டில் மாற்றத்தை ஏற்க முடியாத மனநிலையிலும், நிறவேறுபாட்டினால் புறக்கணித்தல், நெறிபிறழ்வு ஆகியவையே குழந்தைகளின் மனச்சிக்கலுக்குக் காரணமாக அமைவதாக சரோஜா பாண்டியன் விளங்கச் செய்துள்ளார்.

**குறிப்புகள்**

1. தி.சு.நடராஜன், திறனாய்வுக் கொள்கைகள், பக்.104, 105
2. எஸ். சந்தானம். கல்வியில் உளவியல் அடிப்படைகள், ப.2

**துணைமைச் சான்றாதாரங்கள்**

1. சந்தானம், எஸ்., கல்வியில் உளவியல் அடிப்படைகள், புழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மதுரை. 1989.
2. நடராஜன், தி.சு., திறனாய்வுக் கொள்கைகள், அன்னம் பி. லுமிடெட், சென்னை.